**சுருக்கம்**

சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை – புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் – செங்கல்பட்டு மாவட்டத்தில், பல்வேறு குறைபாடுகள் உள்ள மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக மத்திய அரசால் நடத்தப்படும் சிறப்புப் பள்ளியில் (National Institute for Empowerment of Persons with Multiple Disabilities (NIEPMD) பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு சத்துணவுத் திட்டத்தை நீட்டித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் (சந4–1) துறை**

அரசாணை (ப) எண். 36

நாள். 11.03.2022.
திருவள்ளுவர் ஆண்டு 2053
பிலவ மாசி 27

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.277, பொது (மு.அ.ச.உ.தி) துறை நாள் 22.02.1983.
2. சமூக நல ஆணையர் அவர்களின் கடித ந.க.எண்.8675/ சஉதி1(1)/ 2020, நாள். 26.08.2021
3. மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு அவர்களின் நேர்முக கடித எண்.8756/2018/சஉதி/அ1 நாள் 26.08.2021.

------

ஆணை:–

மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில் சமூக நல ஆணையர் அவர்கள், செங்கல்பட்டு மாவட்டத்தில் மத்திய அரசால் நடத்தப்படும் National Institute for Empowerment of Persons with Multiple Disabilities (NIEPMD) சிறப்புப் பள்ளியில் பல்வேறு குறைபாடுகளுடைய மாற்றுத் திறனாளி மாணவர்கள் பயின்று வருகின்றனர் என்றும், இப்பள்ளிக்கு மதிய உணவு வழங்க மானியம் ஏதும் ஒதுக்கப்படவில்லை எனவும் அங்கு பயிலும் மாணவர்களுக்கு மதிய உணவு வழங்க பாராளுமன்ற நிலைக் குழுவால் பரிந்துரைக்கப்பட்டுள்ளது என்று முந்தைய ஒருங்கிணைந்த காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு) தெரிவித்துள்ளார் என்றும் சத்துணவுத் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகள் 1–ஆம் வகுப்பு முதல் 10–ஆம் வகுப்பு வரை பயில்பவர்கள் மட்டும் ஆவர் என்றும்

தபிபா

இப்பள்ளியில் பயிலும் மாணவர்கள் 2 வயது முதல் 19 வயது வரை உடையவர்களாக இருந்தபோதிலும், இப்பள்ளியில் பயிலும் 180 மாணவர்களின் சூழ்நிலையை கருதி, சிறப்பினமாக மேற்கண்ட சிறப்பு பள்ளிக்கு (NIEPMD) சத்துணவுத் திட்டத்தை நீட்டிக்குமாறு தெரிவித்து மேற்காணும் சிறப்பு பள்ளி மாணவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தின் கீழ் சத்துணவு வழங்கும் பொருட்டு எரிவாயு இணைப்பு செலவினம் ரூ.22,350/- மற்றும் சத்துணவு வழங்குவதற்கான செலவினம் ரூ.3,73,939/- ஆக மொத்தம் ஓராண்டிற்கு ரூ.3.96 இலட்சம் செலவினம் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

2. மேலும், சமூக நல இயக்குநர் அவர்கள் மேற்காணும் சிறப்புப் பள்ளிக்கான சத்துணவு மையத்திற்கென புதிய பணியிடங்களை தோற்றுவிக்காமல் மாவட்டங்களில் தற்போதுள்ள பணியாளர்களைக் கொண்டு மறு நியமனத்தின்/பணி நிரவல் மூலம் நியமனம் செய்திடலாம் என்றும் சம்மந்தப்பட்ட வட்டார வளர்ச்சி அலுவலர்களைக்கொண்டு இப்பள்ளி சத்துணவு மையத்தினை கண்காணிக்கலாம் என்றும் தெரிவித்து மேற்காணும் சிறப்புப் பள்ளிக்கு சத்துணவுத் திட்டத்தை நீட்டிக்க அனுமதி வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர், செங்கல்பட்டு அவர்களின் நேர்முகக் கடிதத்தில், மேற்காணும் சிறப்புப் பள்ளியில் உள்ள மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு மாநில அரசால் செயல்படுத்தப்படும் மதிய உணவுத் திட்டத்தை நீட்டிக்க பாராளுமன்ற நிலைக் குழு ஏற்கனவே வலியுறுத்தியுள்ளதாகவும், மதிய உணவுத் திட்டத்தின் பலனை இம்மாணவர்களுக்கு வழங்கும் விதத்தில் மேற்காணும் சிறப்புப் பள்ளியில் பயிலும் மாணவர்களை மதிய உணவுத் திட்டத்தின்கீழ் சேர்க்கும் பொருட்டு உரிய ஆணை வழங்குமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

4. சமூக நல ஆணையர் (தற்பொழுது சமூக நல இயக்குநர்) மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் பரிந்துரைகளை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து அதனை ஏற்று, அரசாணை (நிலை) எண்.277 பொது (முஅசஉதி) துறை, நாள் 22.02.1983இல் அரசு, அரசு உதவிபெறும் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படும் பள்ளிகளுக்கு மட்டுமே சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டும் என்று வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் இருந்து செங்கல்பட்டு மாவட்டத்தில் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்காக மத்திய அரசு நிறுவனமான NIEPMD –ஆல் நடத்தப்படும் பள்ளிக்கு சிறப்பு நிகழ்வாக விலக்களித்து மேற்காணும் பள்ளியில் பயிலும் மாற்றுத் திறனாளி மாணவர்களுக்கு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவுத் திட்டத்தை நீட்டித்து ஆணையிடுகிறது.

5. மேலும் இதன் பொருட்டு புதிய பணியிடங்களை தோற்றுவிக்காமல் ஏற்கனவே பணிபுரிந்து வரும் சத்துணவுப் பணியாளர்களை பணி நிரவல் செய்வதன்

(தொடர்)

மூலம் மேற்காணும் பள்ளி சத்துணவு மையத்திற்கான பணியாளர்களை நியமனம் செய்யுமாறு சமூக நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித்துறை அ.சா.எண்.10892/நிதி(சந)/2022 நாள் 08.03.2022 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஷம்பு கல்லோலிகர்
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
சமூக நல இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித்தலைவர்,
செங்கல்பட்டு மாவட்டம்.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை – 18.
சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை.

நகல்
நிதித் (ச.ந) துறை, சென்னை – 9.
இ.கோ./உ.ந.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

அ. அருண் கிளாரன்ஸ்
15/3/2022
பிரிவு அலுவலர்

15/3/2022